ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

SRI VAISHNAVAN

உண்மை யறிவை உணர்த்தும்.

ஒருமாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

தொகுதி 5. 1105-ம௵ பகுதி 8.

பிரமோதூத ௵ ஆனிமீ

கடவுள் வணக்கம்

நீரகத்தாய் நெடுவரை யினுச்சி மேலாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்த கச்சி
ஊரகத்தா யொண்டுறை நீர் வெஃகாவுள்ளா
யுள்ளுவா ருள்ளத் தாயுலக மேத்தும்
காரகத்தாய் கார்வானத் துள்ளாய் கள்வா
காமரு பூங்காவிரியின் றென்பால் மன்னு
பேரகத்தாய் பேராதென் னெஞ்சி னுள்ளாய்
பெருமானு ன்றிருவடியே பேணினேனே.

N, B. நம் ஸ்ரீவைஷ்ணவன் ஆபீஸில் வேலைபார்த்து வந்த கோவிந்தக்கோன் சந்தாவசூலை நம்மிடம் சரியாய் ஒப்புவிக்காமல் பலமோசடிகள் செய்திருப்பதால் மேற்படியாரை 1—4—30முதல் வேலையைவிட்டுநீக்கியிருக்கிறது. நேயர்கள் தெரிந்துகொள்ளவும்.

ஸ்ரீ

ஸ்ரீவைஷ்ணவ தர்மம்

உண்மை பக்தர் யார்?

சில மாதங்களாக மேற்கண்ட விஷயம் இப்பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பெற்றுவருகிறது. இது சம்பந்தமாய் சென்ற மாதம் வெளிவந்த 7-வது சஞ்சிகையில் பக்கம் 98 முதல் அடங்கியுள்ள விஷயங்களைக்கண்டித்து மதராஸ் நண்பர் ஒருவர் எமக்கு ஓர் ஆக்ஷேபணைக்கடிதம் அனுப்பியுள்ளார். அந்நண்பரின்வேண்டுகோளுக்கிணங்கி அக்கடிதத்தையும், அதற்காக வெளிவந்த சமாதானத்தையும் கீழே பிரசுரம் செய்திருக்கிறேன். நேயர்கள் கவனிப்பார்களாக.

ப—ர்

மதராஸ் நண்பரின் ஆக்ஷேபக்கடிதம்.

1. ஸ்ருஷ்டி கர்த்தாவாகிய நாராயணன் நிலைமையிலிருந்து பார்க்கும் பக்ஷத்தில் சகலஜீவகோடிகளும் (மனுஷ்யன் முதல் புழு வகையறா வரைக்கும்) மேன்மை, கீழ்மையில்லாமல் எல்லாம் அவருக்கு ஒன்றே. அப்படியிருக்கும் பக்ஷத்தில் உலகம் சரிவர நடைபெறுமென்று அவரே மேன்மை தாழ்மைசெய்திருக்கிறார் என்பது திண்ணம் வர்ணாஸ்ரமதர்மமும் அவராலேயே ஏற்படுத்தப்பட்டது. அவரே வெளிப்படையாகச்செய்திருக்கும் பக்ஷத்தில் குரு, ஆச்சார்யன், சிஷ்யன் என்ற சம்பந்தங்கள் இல்லாமல் போய்விடும் என்பதை உத்தேசித்து மனுஷ்ய முகாந்தரமாய் இந்த வர்ணாச்சிரம தர்மத்தை வெளியிட்டார். இந்த விஷயம் மனுஷ்ய அவயவங்களை நன்று விளக்கும். வேத, சாஸ்திரங்களை நம்பும் பக்ஷத்தில் முழுமையும் நம்பவேண்டும், சமயத்திற்குத் தக்கபடி எடுத்துக்கொள்ளக்கூடாது.

2. பிராமணத்வத்திற்கும், ஆங்கிலேய பீ-ஏ பட்டத்திற்கும் என்னசம்பந்தம்? மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும்முடிச்சுப்போடுகிறதைப் போலிருக்கிறது. பூர்வகாலத்திலும கசடறக் கற்றவர்கள் பண்டிதர்களாயும் வித்வான்களாயும் பட்டங்களைப்பெற்று உன்னதபதவியை வகித்திருக்கவில்லையா? தற்காலகல்விக்குத்தக்கபடி பட்டஙகள் கிடைக்கின்றன. அந்தப்பட்டங்களுக்குக் கூட தற்காலம் மகிமையில்லாமல் சிரிப்பாய் சிரிக்கின்றதை நாம் பார்க்கின்றோம. தற்சமயம் பீ-ஏ பட்டம் பெறாதவர்கள் ஒருவருக்கும் கிடைக்கக்கூடாத உன்னதபதவியை அடைந்துமேன்மையை வகித்திருப்பதையும் பார்க்கலாம். இது என்னகாரணம்! யதாராஜா ததாபிரஜா என்றதினால் பீ.ஏ பட்டஙகளுக்கும் பிராமணத்வத்திற்கும் ஒவ்வமுடியாது.

3. யாகம், தபங்களுக்குக்காரணமென்ன? நிஷ்காமியமாகப் பகவானைப்பூஜிக்கிறவன் பக்தன் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. அவ்வித பக்தர்கள் லக்ஷத்திற்கு எத்தனை தேறுவார்கள்? அப்படித்தேறுபவர்களை நிஷ்காமியமாகப்பூஜிக்கிறார்களென்று சொல்லமுடியுமா? அவர்களின் இருதயத்தைப்பரீக்ஷிக்கமுடியுமா? இதுகளை ஈஸ்வரன்தானே பரீக்ஷிக்கவேண்டும். மனுஷ்யனாலே முடியுமா? வாயால் சொல்லிக்கொள்ளலாமேயொழிய இந்தக்கலியுகத்தில் கையால் செய்ய முடியாது என்பது திண்ணம் ஈஸ்வரன் செயல்களை மனுஷ்யனுக்குச்சாட்டி விடுவதில் நண்பருக்குப்பிரியம் போலும்.

4. பிராம்மணர்கள்தக்ஷிணை பெற்றுக்கொண்டு வருணஜெபம் செய்கிறார்களென்பது காமியந்தான்-சொல்பதக்ஷிணையினாலே அதிகமழையைப் பொழிவித்து அதனால் சகல ஜீவராசிகளும உஜ்ஜீவிக்கின்றதே என்ற விஷயம் நண்பருக்குமனதில்தோற்றவில்லை போலும். இச்சொல்ப விஷயமே பிராம்மணவிடத்தில் ஜீவகாருண்யம இருக்கிறதென்பதை நன்று விளக்குகிறது. மேலும் பிராம்மணர்கள் மந்திரங்களை ஜெபித்துமுடிக்குங்காலத்தில் என்ன சொல்லுகிறார்கள் சகல ஜீவராசிகளும் சுகமடையவேண்டும், உலகத்தில்

க்ஷேமம் உண்டாகவேண்டும் என்று முடிக்கிறார்களே யொழிய தாம்சுகமாயிருக்கவேண்டும் என்று சொல்வதில்லை. இதுவே அவர்களிடத்தில் ஜீவகாருண்ணியம் காட்டுகிறது.

5. பிறப்பினால்பிராம்மணனுக்கு மேன்மைகிடையாது என்று சொல்லும் பக்ஷத்தில் அந்த சாஸ்திரங்களையேகொண்டு இந்துமக்கள் பூஜிக்கும் பசு, கெருடன், நாகம், அரசு, தங்கம், இவைகளுக்கு அத்தகைய மேன்மையிருக்கிறதென்பது என்ன திண்ணம்? சாஸ்திரங்களின்படி இவைகளுக்கு மேன்மை கொடுக்கும்பக்ஷத்தில் பிராம்மணனுக்கும மேன்மை கொடுக்கவேண்டும்." மேற்கண்டவை கட்குசிருஷ்டிகாலத்திலிருந்த குணங்கள் இல்லாவிட்டாலும் பரம்பரையையொட்டி மேன்மையடையவேண்டும், இல்லாவிடில் சாஸ்திரங்களை அடியோடு தள்ளிவிடவேண்டும.

6. ஏவென்சகண்பருடைய கொள்கை ப்ரம்மத்வேஷம்போல் தோற்றுகிறது. ஆகையால் கண்பர் சற்றுகோம தன்கையிரல்களின் அமைப்பையும் பொருப்பையும் கவனித்து சாஸ்திரங்களையும் அநுசரித்து பார்க்கும் பக்ஷத்தில் அவர் கொண்டிருக்கிற கொள்கைமாறி பின் தொடர்ச்சியும நிற்குமென்று நம்புகிறேன்.

இதை நண்பர் அவருடைய பத்திரிகையில் ப்ரசுரம் செய்து அப்படி அடியேன் சொல்லுவதில் அர்த்தபேதங்கள் இருக்கும்பக்ஷத்தில் அடியேனைச்சீர்திருத்துவார் என்று நம்புகிறேன் (24-6-30)

ஆக்ஷேபத்திற்கு சமாதானம்

ஜாதியைப்பற்றி மதராஸ் நண்பர்விடுத்த ஆக்ஷேபணைக்கடிதம் பார்வையிடப்பெற்றது. விழித்திருக்கும் மாநதர்களைத்தூக்கத்திலிருப்பதாகவே கருதி இந்நண்பர் பேசுகிறார் போலும். அன்றியும் இவர் சாதிப்பெருமை என்ற பளுவான மூட்டையைத்தலையிற் சுமந்துகொண்டு இவ்விஷயத்தைப்பரிசீலனைசெய்கிறார், தயவு

செய்த இந்நண்பர் இம்முட்டையைக்களைத்தெறிந்துவிட்டு நடுவு நிலைமையை வகித்தீப்பரிசீலனை செய்தால் உண்மை விளங்காமற் போகாது. அவ்விதம் செய்யாதவரை இவர்புத்திக்குப்பூணால் தரித்தவர் எல்லோரும் மகரிஷிகளாகவே காணப்படுவார்கள். இத்தகைய மனப்பான்மை வாய்ந்த நண்பர்களின் ஆக்ஷேபங்களுக்கு சமாதானம் கூறப்புகுவது பித்துப்பிடித்துத்திரிபவனைவசப்படுத்த முயல்வது போலாகும். ஆயினும் மதாசல் நண்பரின் வேண்டுகோளைமதித்து இவ்வாக்ஷேபங்கட்கு சிற்சில குறிப்புகளையிட்டும் எண்டுகூறுவாம்.

ஆக்ஷேபத்தின் 1-வது பிரிவைப்பற்றி—: இவ்விந்திய தேசத்தில் வர்ணாச்சிரமப்பிரிவுகள் உண்டுபண்ணப்பட்ட காலத்தில் மக்கள் அனைவரும அறிவொழுக்கங்களில் ஒருபடிப்பட்டவர்களாயிருந்தார்களா? அல்லது பன்திறப்பட்டவர்களாயிருந்தார்களா? என்றவிஷயத்தில் நண்பர் மனத்தைச்செலுத்தாமல்மௌனம்சாதித்துவிட்டார். மக்கள் எல்லோரும் ஒரே தன்மையாயிருந்தார்களெனக்கொள்வது முற்றிலும் பொருத்தமற்றதாகையால் அவர்கள் அறிவு, ஒழுக்கங்களில் பலதிறப்பட்டவர்களாயிருந்தார்களெனவே நிச்சயித்தல் அவசியமாகிறது. ஆகவே அவரவர் அறிவு, ஒழுக்கங்கட்குத்தக்கபடியே இச்சாதிப்பிரிவுகள் அக்காலத்தில் வகுக்கப்பட்டிருக்கவேண்டும். அதாவது அறிவிற்சிறந்தவர்களை பிராம்மணர்களாகவும், பராக்கிரமத்தில் சிறந்தவர்களை க்ஷத்திரியர்களாகவும், பண்டமாற்றலில் பழக்கமுள்ளவர்களை வைசியர்களாகவும், அறிவிற்குறைந்தவர்களைப் பணிசெய்யும் சூத்திரர்களாகவும் பாகுபாடு செய்திருக்கவேண்டும். இவ்வுண்மையை மறைத்து கடவுள் எப்படியோ நால்வகைச்சாதிகளை உண்டுபண்ணிவிட்டாரெனக்கூறுவது கடவுள் தலையில் பழியைச்சுமத்துவதாகும். மக்களின் ஆசாரங்களைக்கவனியாமல் மேன்மை தாழ்மையோடு கூடியவர்ணாச்சிரம தர்மத்தைக்கடவுள் எவ்விதம் சிருஷ்டிக்கக் முடியும்? இவ்விஷயத்தை நண்பர் கூர்ந்துகவனிக்கவேண்டுகிறேன்

சிலர் கடவுள் மக்களை சிருஷ்டிக்கும்போதே சிலரை பணிகொள்ளும் எஜமானர்களாகவும் சிலரை பணிசெய்யும் அடிமை

ளாகவும் சிருஷ்டி செய்தாரெனக்கூறுகிறார்கள். அதாவது மக்களை சிருஷ்டிக்கும்போதே வர்ணாச்சிரமப்பிரிவும் உண்டுபண்ணப்பட்டதென்பதாம். இப்படிக்கூறுவது கடவுளின் செயலைக் கோமாளித்தனமாக முடிப்பதாகும். கடவுளுக்கு மக்கள் எல்லோரும் ஒன்றே. கடவுள் பாரபக்ஷமாக ஒருவனை எஜமானனாகவும் ஒருவனை வேலையக்காரனாகவும் நியமிக்கமாட்டார். மக்கள் அறிவின்வழி நின்று செய்யும் வினைகருத்தக்கபடி கடவுள் அவர்கட்கு நன்மை தீமைகளையும், உயர்வு தாழ்வுகளையும் கொடுக்கிறார். இவ்விதமே வேதசாஸ்திரங்களும் கூறுகின்றன. ஆனால் பிர்ம்மாவின் முகத்தில் பிராம்மணர்களும், புஜத்தில் க்ஷத்திரியர்களும், தொடையில் வைசியர்களும், பாதத்தில் சூத்திரர்களும் பிறந்தார்களென சிலநூல்களில் கூறப்பட்டுள்ளது. மக்கள் இவ்விஷயத்தை நன்றாய்ப்பரிசீலனைசெய்து மர்மத்தை அறிந்துகொள்ளல்வேண்டும். அதாவது அறிவுக்குக்காரணமான மூளைசிரசிலேயேயிருப்பதால் பிராம்மணர் பிர்ம்மாவின் முகத்தில் பிறந்தவர்களென்றும், பராக்கிரமத்திற்குரிய முக்கிய அவயவம் புஜமானபடியால் க்ஷத்திரியர் புஜத்தில் பிறந்தவர்களென்றும், பண்டமாற்றல் தொழிலுக்கு நடை அவசியமானபடியால் வைசியர் தொடையில் பிறந்தவர்களென்றும், பாதம் எல்லா அவயவங்களிலும் தாழ்ந்ததாகையால் அறிவிற்றாழ்ந்த சூத்திரர் பாதத்தில் பிறந்தவர்களென்றும் கூறப்படுகிறது. சாதிப்பிரிவிற்குரிய காரணங்களைக்குறிக்கும்பொருட்டே சாஸ்திரங்களில் இவ்விதம் வருணனைசெய்யப்பெற்றிருக்கிறது. புராதனமான சாஸ்திரங்களில் சிலகருத்துக்களை வெளியிடுதற்கு இத்தகைய முறைகள் அநுசரிக்கப்பட்டிருக்கின்றன. இதன்றிக் கதாரூபமாயும் சிலகருத்துககளை வெளியிடுதலுமுண்டு. நிற்க,

இன்னும் நம் நண்பர் "வர்ணாச்சிரம தர்மத்தை மனுஷ்ய அவயவங்களே நன்று விளக்கும்" எனக்கூறுகினார், இது குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்கொள்ளும் கதையாகமுடிகிறது. மனுஷ்ய அவயங்கள் அசேதனங்கள். அறிவில்லாதவைகள், மாறுதலின்றி ஒருபடிப்பட்டிருக்கும் தன்மையாய்த்தவைகள்

இவைகளைப்போல் மனிதர்களும் செத்தபிணமாய்க்கிடந்தால் வர்ணாச்சிரமதர்மம் எப்படி வெளியாகுமென்பது தெரியவில்லை.

மேலும் வேத சாஸ்திரங்களை நடபடி பக்ஷத்தில் முழுமையும் நம்பவேணுமென நண்பர் கூறுகிறார். வேதசாஸ்திரங்களை நம்புகிறவர்கள் வேதசாஸ்திரம் கூறுகிறபடி நடப்பதில்லை. இதற்கு எவ்வளவோ உதாரணம் காட்டலாம். பூர்வகாலத்தில் பிராமணர்கள் ஜந்துக்களைவதைசெய்து யக்கியம், யாகம், செய்துவந்திருக்கிறார்கள். ஆனால் பிற்காலத்தில் இவ்வழக்கம் அடியோடு நின்றுபோய்விட்டது. சிராத்தாதிகளிற்கூட மது மாமிசங்கட்குப்பதிலாக உழுந்து கோதும்பையை உபயோகிக்கிறார்கள். இப்புதிய வழக்கத்தைசகுற்றமாக நண்பர்கூறுவாரா? வேதசாஸ்திரங்கள் ஒரேகாலத்தில் ஏற்பட்டனவகளல்ல முன்னும் பின்னுமாகவே உண்டுபண்ணப்பட்டவைகள். காலதேசவர்த்தமானங்கட்குத்தக்கபடி அவைகளில் சிலமாறுதல்களும்காணப்படுகின்றன அவ்விதமே மனிதரது ஒழுக்கங்களிலும் மாறுதல் காணப்படுவது இயல்பு. ஆனால் அவ்வொழுக்கங்கள் சத்தியத்திற்கும், நியாயத்திற்கும், அன்பிற்கும் ஒத்தவைகளாயிருக்கின்றதாவென்பதை மட்டும் யாம் முக்கியமாய்க்கவனிக்கவேண்டும். பல அறநெறிகளும், தத்துவபோதனைகளும், அரிய ஆராய்ச்சிகளும் பல புராதன வேத சாஸ்திரங்களில் அடங்கியுள்ளன. ஆதலால் அவைகளைப்பொன்னேபோல் போற்றி வருவது மக்களது கடமையாகும். ஆனால் காலதேச வர்த்தமானங்களையனுசரித்து அவ்வேதசாஸ்திரங்களிலுள்ள சில விதிகளை மாற்றியனுஷ்டிப்பது அவசியமென ஏற்பட்டால் அவ்விதம் செய்து கொள்வதே உசிதமாகும். அப்படிச் செய்வதால் மக்கள் வேத சாஸ்திரங்கட்குத்துரோகம் செய்தவர்களாக மாட்டார்கள்.

ஆக்ஷேபத்தின் 2-வது பிரிவைப்பற்றி—. பிராம்மணத்வத்திற்கும் ஆங்கிலேய பி-ஏ பட்டத்திற்கும் என்னசம்பந்தம் என்று நண்பர் பரிகசித்துப்பேசியிருக்கிறார். எதற்காக இவ்வுதாரணம் காட்டப்பெற்றதென்பதை நண்பர்சிந்திக்கவேயில்லை. இனியாவது

சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சட்டஞானம் இல்லாதவனை வக்கீலாக அங்கீகரிக்கமுடியுமா? வைத்திய ஞானமில்லாதவனை வைத்தியனாக ஒப்புக்கொள்ளமுடியுமா? இலக்கண இலக்கிய ஞானமில்லாதவனை வித்வானாகமதிக்க முடியுமா? முடியாதல்லவா! அதுபோலவே பிராம்மணனுக்குரிய ஒழுக்கமில்லாதவனை பிராம்மணனாக அங்கீகரிக்கமுடியாது. இதற்கு வேதசாஸ்திரங்களில் எவ்வளவோ வாக்கியங்கள் காட்டலாம். பிராம்மணன் ஒழுக்கம் தவறியகாரணத்தால் பிராம்மணப்பதவி நீங்கி சண்டாளனான கதைகள் பலஉண்டு. ஒருவன் எல்லோராலும் வணங்கப்பட வேண்டும் என்றால் அவனுக்குத்தக்க யோக்கியதை வேண்டுமென்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆக்ஷேபத்தின் 3-வது பிரிவைப்பற்றி—: நிஷ்காமியமாக பகவானைப் பூஜிக்கிறவனே உண்மை பக்தன் என வைஷ்ணவனில்கூறப்பட்டுள்ளது. இதைஎவரும்மறுக்கமுடியாது, ஆனால்இதைக்கூறுவதில்நண்பர்க்கு மனக்கசப்பு ஏற்பட்டதின் காரணம் தெரியவில்லை நிஷ்காமியமாகபக்திசெய்கிறவர்கள் லக்ஷத்திற்கு ஒருசிலர்கூட இருக்கமாட்டார்களென நண்பர்கூறுகிறார். இதுஉண்மையே ஆனால் இதற்கும்உண்மைபக்தர்களின் லக்ஷணம்சொல்லுகைக்கும்என்ன சம்பந்தம்? உண்மைபக்தர்காணக்கிடையாது என்றகாரணத்தால் அவர்களின்லக்ஷணத்தைசொல்லக்கூடாதா? மேலும்ஒருமனிதனுடைய இருதயத்தை கடவுளால்பரிக்ஷிக்கமுடியுமேயன்றிமனிதர்களால் பரிக்ஷிக்கமுடியாதெனவும்கூறப்படுகிறது இதுவும் உண்மைதான். ஆனால் ஒருவன் வெளிப்படையாகப்பல அயோக்கியத்தனமான காரியங்களைச்செய்து வந்தால் அதைமனிதர்கள் அறிந்துகொள்ள மாட்டார்களா? அந்த அயோக்கியர்கள் எச்சாதியினராயினும் அவர்களை ஒதுக்கித்தள்ளவேண்டியது அவசியந்தானே? இந்த முடிவுக்குவருவதில்திருப்தியில்லாமையேநண்பரதுமனக்கசப்புக்குக்காரணம் போதும். (தொடரும்)

(முன் 104-ம் பக்கத்தொடர்ச்சி)

"கண்ணுதான் முகனைப்படைத்தானே காரணா கரியாய்அடியேன்
உண்ணுநாள் பசியாவதொன்றில்லை ஓவாதே நமோ நாரணாவென்று
எண்ணுநாளும் இருக்கெசுச்சாமவேத நாண்மலர் கொண்டுஉனபாதம்
நண்ணுநாள் அவைதத்துறுமாகில் அன்றெனக்கவைபட்டினிநாளே"

என்கிறபடி பகவானுடைய திருநாமங்களை யெண்ணுநாளும் அவன் திருவடிமலர்களையும் வேதமந்திரங்களையும் கொண்டு நண்ணு நாளுமே பட்டினி நாளாக அனுஸந்தித்துப்போந்த ஆழ்வார்களைப்போல் தேஹாத்மாபிமானத்தைப் போக்கி பகவந்நாமத்தை யநுஸந்தித்தலும், அவன் திருவடிகளை வணங்குதலினால் உண்டாகும் பகவத்ஸம்பந்தமாகிய தொண்டர் குலத்தைபெறுதலே ஆழ்வார் கருத்தெனக்கொள்க. அபிஜ்ஞகளித் தியாவ்ருத்தங்களால் தன்னியரான ஸ்ரீ குகப்பெருமாள் விஷயமாக அவைவொன்றையும் பாராதே சக்யரான பெருமாள் தாம், "உன்தோழி" என்று புருஷகாரஸம்பந்தத்தையும் "உம்பி" என்று பாகவதஅங்கிகாரத்தையும்முண்டாக்கி, "தோழன் நீ எனக்கு என்று" தாமும்அங்கிகரித்தும் "இங்கொழி" என்றுதாமுகந்த கைங்கர்யத்தையும் கொண்டாரென்கையாலே ஜாமவ்ருத்தாதிகள் அப்ரயோஜகம், பகவத்க்ருபையே ப்ரயோஜனம் என்னுமிடம் வ்யக்தம், ஸ்ரீ குகப்பெருமான்பெரும்பேற்றைப்பெற்றதும் பகவத் ஸம்பந்தத்தைப்பெற்ற பாக்கியத்தாலன்றோ? இக்குலமே எனையஆஸ்ரமத்திக்கு மேம்பட்டதும்இனிவருக்குலமும்இதற்கு நிகரில்லை யென்னலாம்படியான ஸ்ரேயஸ்சையுடையதாக ஸாஸ்திரமுகத்தாலும் ப்ரமாணிகர்களாலும் அங்கிகரிக்கப்பட்டு நிலவுகின்றது. ஆயினும் பகவத் ஸம்பந்தம் பெறுவதால் பண்டைக்குலம் கழிந்து தொண்டைக் குலம்பெறுவதெவ்வனமென ஓர் ஆசங்கை யெழலாம்அன்பர்களே! பிறப்பைப்பற்றியுள்ள பூர்வ ஜாதியானது மற்றொன்றின் ஸம்பந்தத்தால் கழிந்து அபூர்வமான தர்மமுண்டாக சாஸ்திரத்தாலும் ப்ரத்யக்ஷத்தாலும் காண்கிறோம். எங்ஙனமெனின், மட்குடமானது அக்னிஸம்பந்தத்தால் உற்பத்தியிலிருந்த பசுமை நிறம் மாறிச்செந்நிறத்தையடைகிறது. குளவியினால் கொட்டப்பட்ட புழுவானது முன்னுருமாறி குளவியேயாகின்றது. இரும்பானது

* ஸ்பர்ச வேதி ஸம்பந்தத்தால் பசும் பொன்னாகா நின்றது. கௌதமருடைய சாபத்தால் அகலிகைப்பெண் கல்லானாள். ராஜாவான திரிசங்கு வசிஷ்ட புத்ரசாபத்தால் அப்பிறப்பே சண்டாளனானான். அரசனான விஸ்வாமித்திரன் தவத்தாலும் வசிஷ்ட வாக்கியத்தாலும் ப்ரஹ்மருஷியானான் இப்படி ஒருபிறப்பிலேயே தாழ்வுஉயர்வானதும்உயர்வுதாழ்வாவதும் ப்ரத்யக்ஷஸாஸ்திரஸம்மதமாகையாலும், வேசியான ஊர்வசிவயிற்றில் பிறந்த வசிஷ்டரும் சக்கிலிச்சியிடம் உற்பவித்த சத்தனும், புலச்சியிடம் தோன்றிய பாராசரும், மீன்வலைச்சியால் ஈன்ற வியாசமுனியும், கழுதையால் கருவுயிர்த்திட்ட கார்க்கேயரும், மான்பால் தோன்றிய கலைக்கோட்டுமுனியும், ப்ராமணஜென்மத்தை பெற்றார்களென்ற பேரதே ஸுஸ்பஷ்டம்,

குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ்இழிந்து—எத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுள்
கலந்தார் அடியார் தம்மடியாரெம்மடிகளே.

[திருவாய்மொழி]

திக்குற்ற கீர்த்திஇராமானுசனை என்செய்வினையாம்
மெய்க்குற்றம் நீக்கிவிளங்கிய மேகத்தை—மேவும்நல்லோர்
எக்குற்றவாளர் எது பிறப்பேதியல்வாக நின்றோர்
அக்குற்ற மப்பிறப்புஅவ்வியல்வே நம்மையாட்கொள்ளுமே.

(இராமாநுசநூற்றந்தாதி)

பாதியா யழுகிய கால் கையரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தாரேனு
மாதியா யாவனையா வென பாகி
லவரன்றோ யாம் வணங்கு மடிகளாவார்
சாதியா லொழுக்கத்தான மிக்கோரேனுஞ்
சதுர்மறையால் வேள்வியாற் றக்கோரேனுஞ்

---

* பச்சிலை மூலிகையால் உண்டாகும் ஓர்வகை ஔஷதம்

போதிறைன்முகன பணிபப் பள்ளி கொள்வான்
பொன் னரங்கம் போற்றாதார் புலையர்தாமே.

[திருவரங்கக்கலம்பகம்]

எனவே இனி இழில்லை யென்னும்படியான குலத்தில் பிறந்து நாய் மாமிசம் தின்னும சண்டாளனேயாகிலும் பகவத்சம்பந்த முண்டாளுல் பகவத் பக்தியாகிய தீபாக்கினியால் எரிக்கப்பட்டு இழிகுல தோஷம் கழிந்தவனாய் பண்டைக்குலம் கழிந்து தொண்டைக்குலம் பெறுவதென்பது திண்ணம், இனி இக்குலத்தின் பெருமையை பேசப்புகின் எல்லையில்லாத தொன்றும். ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்து இங்கு பிறந்த அண்ணல் ஸ்ரீ சபரி என்னும் வேடுவச்சி கையாலே கொடுத்ததை அமுதுசெய்தருளினதும், கேவலம பிறந்த ஆஸ்ரமத்தை நோக்கி அகங்கரித்திருந்த பீஷ்மத்ரோணாதிகள் கிரஹங்களைவிட்டு ஸ்ரீவிதுரர் திருமாளிகையிலே அமுதுசெய்ததும், ஸ்ரீவிபீஷண ஆழ்வாரை ராக்ஷசகுலத்தனாக நினையாமல் ராகவன் தன்னோடொக்க இக்ஷ்வாகுவம்சியனாக நினைத்து வார்த்தை அருளியதும, பெரியவுடையாருக்கு இளையபெருமாள் அருகில் இருக்கச்செய்தேயும் தானே ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் பண்ணியருளியதும், இக்குலத்தின் பெருமையைக் கோரியன்றோ? எனவே பலசமயங்களைப் பாரினில் பரப்பிநின்ற அப்பரமன்தானே மேல்விழுந்து இக்குலத்தின், சம்பந்தமுடையார் ஸம்பந்தம் ஒழியக ஒழியாதென்று எண்ணியபோதே இயம்புதல் அழகாமோ?

இனி இரண்டாவதாகக் கூறப்பட்ட செல்வத்தைப்பற்றி ஆராய்வோம் செல்வமானது பொருட்செல்வம, மக்கட்செல்வம், கல்விச்செல்வம, செவிச்செல்வம் எனப்பலபடியாக வழங்கப்பட்டு வருகிறபடியால் இது பொதுப்பெயரென்று அறியலாம். இங்கு உண்ணல் உடுத்தல் முதலிய இன்பங்களைப் பெறுதற்கு உபகாரமாயிருக்கிற பொருட் செல்வத்தையே குறிக்குமென இசைந்தாலும் ஆழ்வார்தம் ஸ்வரூபத்தை நோக்குங்கால்;

“ நின்னையே தான்வேண்டி நீள் செல்வம் வேண்டாதான்”
என்றும்

“ ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன் ”

என்றும் நிந்தித்தும் வெறுத்தும் கூறும் இயல்பினையுடைய ஏக கண்டர்களானபடியால் பகவதேக போகரான இவர்கள் ஸ்வரூபத்துக்குத்தகாதவொன்றை விரும்பார்கள் என்பது கையிலங்கு நெல்லிக்கனியன்றோ? அதவா இச்செல்வத்தின் இயல்பைக் கூர்ந்து நோக்குங்கால்;

“ கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ் செல்வம்
போக்குமது விளிந்தற்று, [திருக்குறள்]

பல்கதிர்விரித்துத் தோன்றிப்பாடு செய்சுந்நிரே போல
மல்லலிருலகிற் றோன்றி மறைந்திடுநம்மை விட்டுச்
செல்வமென் றறுவதற்குஞ் செல்வமென்றுரைக்கும் பேர்கள்
நல்லலை விளிப்பதாகாதருப்பெறற் செல்வம பவோய்

நூல்லொழுக் கினைத்தீய வொழுக்கமொன்று ரைக்கச்செய்யும்
புலவொழுக் கினைத்தூய புலத்தமொன் றுரைக்கச்செய்யும்
கல்லகற் புடையமாதர் கலகதையஞ்சாமை செய்யும்
பல்வகைத் துயாமசெய்யும் பாழ்பொருள் பற்றுள்ளார்க்கே
(குசேலோபாக்கியானம்).

இங்ஙனம் நிலையில்லாததும் தன்னை பற்றினாரை பாதிக்க விடும் இயல்பினையுடைய பாழ் பொருளிடத்தில் யார்தான் பற்றுடையாராவர். அதவா இவர்களே விரும்பினாலும் ஸர்வஜ்ஞனும் தர்மாத்மாவாயுமுள்ள ஈஸ்வரன் இவர்கள் விஷயத்தில் எதுவரையில் உபகரிப்பானெனில்;

விருப்புறினும் தொண்டர்க்கு வேண்டுமித மல்லால்
திருப்பொலிந்த மார்பனருள் செய்யான்—நெருப்பை

விடாதே குழவிவிழ வருந்தினாலும்
தடாதே யொழியு மோதாய் (ஞானசாரம்)

ஒருகுழவியானது அக்நியை விளையாட்டுக்கருவியாகக் கொண்டு பிடிக்க எத்தனித்தால் ஹிதைஷியான தாய் அக்நியிடத்தே உண்டாகும் ஆபத்தினின்று தப்புவிப்பது போல், அடியார்களாகிய குழவிகள் நெருப்புக்குச்சமமான செல்வத்தை விரும்பினாலும் தாயாகிய ஈஸ்வரன் நெருப்புக்கு ஒப்பாகிய செல்வத்தை கொடாமல் அச்செல்வத்தாலுண்டாகிய ஆபத்தினின்று தப்புவிக்கிறான். எனவே இவர்கள் விரும்பினாலும் ஈஸ்வரன் கொடானென்பது தெளிவாயிற்று. இது வரையில் கூறியவற்றால் ஆழ்வார் தம் ஸ்வரூபத்தை நோக்குங்கால் அவர்களும் இச்செல்வத்தை விரும்பார்கள் என்றும ஈஸ்வரனும் கொடான் என்பதும் தெளிவாயிற்று. பின்னர் செல்வமென்பது யாதா யிருக்குமென நோக்குங்கால்;

மதுமடை யுடைத்துப்பாயும் வளத்துளாய் கண்ணிவேய்ந்து
விந்து புகப்பதுமம செங்கை மெலமெலன வருடச்சேர்ந்து
கதுமென கருதுமன்பர் கருத்தினுட் புகுந்துவாழு
முதுமறை பெருமான்பாதம் பெறுதலே மூரிசெல்வம்
(குசேலோபாக்கியானம்)

என்கிறபடி செல்வத்துக்கு அதிதேவதையும் அகலகில்லேன் இறையும் என்று அவன் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையின் புருஷகாரத்தைப் பெற்று அவன் திருவடி அடைதலே பெருஞ்செல்வமாக கொண்டார். இவர் புருஷகாரம் செய்தாலல்லது ஈஸ்வரன் சகாயம் செய்யானெனபடியால் இவளுடைய புருஷகாரத்துவமே இங்கு முக்யமாகக் கொள்ளவேண்டியிருக்கிறது. இவர் புருஷகார பலத்தால் ஸிதிப்பது இருவருடைய கர்மபாரதந்திரியமும் குலையும் அதாவது இச்சேதனன் புண்ணியபாபங்களின் வசத்திலே யிழிப்புண்டு பகவத் விமுகனாய்த் திரிகையாகிற சேதனனுடைய கர்மபாரதந்திரியமும் இச்சேதனன் கர்மத்தைப்ரதானமாக்கி அதுக்கிடாகவே செய்வதித்தனே யென்று இச்சேதனன்

விஷயத்தில் விமுகனாயிருக்கையாகிற ஈஸ்வரனுடைய கர்மபாரதந் த்ர்யமும் குலையுமென்றபடி. இப்படி புருஷகாரசெல்வத்தைபெற்ற விடமெங்கேனுமுண்டோவென ஆராய்வோமானால், இலங்கைச் செல்வமனைத்தையும் உதறிவிட்டு வந்து சேர்ந்த விபீஷணனை வால் மீகிமுனிவன் "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" என்று விளித்ததால் செல்வத்துக்கு ஸ்ரீயென்றும் திரு என்றும், பொன் என்றும், லக்ஷ்மிக் குரிய பெயரையிட்டுக் கூறுவதுமாயாதலால் அப்போது விபீஷண னிடத்து இருந்த ஸ்ரீயாவது ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயேயாம். இளைய பெருமாள் விஷயத்திலும் கஜேந்திராழ்வான் விஷயத்திலும் இங் ஙனமே சொல்லப்பட்டதுண்டு. அயோத்தி செல்வமனைத்தையும் உதறிவிட்டு இராமபிரான்பின்னே காட்டுக்குப்புறப்பட்ட இளைய பெருமாள் "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" என்னப்பட்டார். அப்போது லக்ஷ்மணனுக்கிருந்த லக்ஷ்மியாவது கைங்கர்யமாகிற லக்ஷ்மியேயாம். "காராபணு மணிவண்ணா நாகணையாய் வாராய் என் இடர் நீக்காய் என முதலையின் வாயிலகப்பட்டுத் துடியா நின்ற கஜேந்திராழ்வான் "ஸாதுநாகவா: ஸ்ரீமாந்" என்னப்பட் டான். அப்போது கஜேந்திராழ்வானுக்கிருந்த ஸ்ரீயாவது பறித்த பூவானது வாடிவதங்குவதற்குமுன் 'அவன் திருவடிகளிலே ஸமர் ப்பிக்கப்பெறவேணுமே என்றிருக்க அபிநிவேசமாகிற செல்வமே யாம். எனவே நிலையில்லாததும் தன்னைப்பற்றினாரை பாதவிக்கவிடு ம் கேவல செல்வத்தை விடுத்து என்று மழியாததும் நித்தியமாய் யுள்ளதுமான லக்ஷ்மியினுடைய புருஷகாரத்தைப்பெற்று அவன் திருவடியை பற்றுதலே ஆழ்வார்கருத்தெனக் கொள்ளவும். இனி மூன்றாவதாக அறைந்த விஷயத்தை கவனிப்போம். அடியார் படுதுயராயினவெல்லாம் நிலந்தரஞ்செய்யும் என்கிறார் தனக்கு அபிமதரானவர்களுக்கு உண்டாகும் துயரங்களை தரை மட்டமாம்படி செய்யுமத்தனையாம். இங்கு துயர் என்றும், படு துயர் என்றும் இருவகையாகக்கூறியுள்ளார், அதாவது துயர் என் பது கேவலமாய் ப்ராயச்சித்தத்தால் தொலையுமத்தனையாய் இல் லாது (அவஸ்யமநு போக்தவ்யம் க்ருதம் கர்மசுபாசுபம், நபுக்தம் க்ஷீயதேகர்மகல்ப கோடி சதைரபி) எனகிறபடி அநேககோடிகள்

பங்களானாலும் அவஸ்யம் அனுபவித்தே தீரும்படியான படுதுயரெல்லாம் தனைமட்டமாம்படி செய்யுமத்தனையாம். ஆயினும் அவஸ்யம் அனுபோக்தவ்யம் என்று அவஸ்யசப்தத்துக்கு யாது ப்ரயோஜனம் என்று ஒரு சங்கையெழலாம்;

ஊழ்வினைக் குறும்ப ரோட்டருவ ரென்றஞ்சி
ஏழை மனமே யினித்தளரேல்—ஆழிவண்ணன்
தனனடிக்கீழ் வீழ்ந்து சரணென்றிரக் தொருகால்
சொன்னதற் பின்னுண்டோ துயர் [ஞானசாரம்]

ஸரணாகதனுனபின்பு பூர்வாக பலரான துக்கமெல்லாம் தீயினில் தூசாகுமென்பதாம் "என்னுடைய நிக்ரஹ பலமாய் வந்தவை நான் இரங்கினல்கிடக்குமோ? அநாதிகால பாபங்களைக் கண்டு நீ பட்டபாட்டை அவைதாம படும்படி பண்ணுகிறேன். இனி உன்கையிலும் உன்னைகாட்டித்தாரேன், என்னுடைப்பில ழுகைகானே போக்கிகொள்ளேனேஎன்கிற முமுக்ஷுப்படியை ஒருசார்பு நோக்கத்தக்கன. எனவே பூர்வபாவியாயுள்ள பாபங்கள் ஸரணாகதனுனபின்பு உறங்கு வான் கைப்பொருள்போல்தானு மறியாமல் பறந்தோடிப்போகுமென்பதில ஐயமில்லை. நீள விசும்பருளும் பரமபதத்தை நோக்கும் என்பதாம. அருளொடு பெருநிலமளிக்கும் பரமபதத்தில் சென்றுபல்லாண்டென்றுபரமாத்மனை சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே என்றும கைங்கர்யத்தை கொடுக்குமென்கை. வலங்கரும் என பதினுல அனுபவித்ததுக் கிடான பலத்தை கொடுக்குமென்பதாம அதாவது எம்பெருமான் திருமேனியால் ஒவ்வொன்றே ஒவ்வொருவர் மயக்குதற்கிடமாம் தோள்கண்டார் தோளேகண்டார் என்னும்படி இல்லாமல் எம்பெருமானுடையதிருமேனி முழுவதும் ஸேவிக்கத்தக்க ஆற்றலைத் தருவதெனறபடி. மற்றுந்தநந்திடும என்கையாலே சேதனர்கோரிய அவரவர் நின்றநின்ற நிலைக்குத்தக்கபடி அளிக்கும். அதவா இவன் அறியாதவற்றையும கொடுக்குமென்பதாம் பெற்ற தாயினுமாயின செய்யுமென்பதினுலே தாயானவள் சரீரத்திலே நோக்குடையாளாகையால் அழியும் இயல்பினையான சரீரத்தை விடுத்துதாயி

கடவுள் எப்படியோ நால்வகைச்சாதிகளை உண்டுபண்ணிவிட்டாரெனக்கூறுவது கடவுள் தலையில் பழியைச்சுமத்துவதாகும்; மக்களின் தாரதாங்களைக்கவனியாமல் மேன்மை தாழ்மையோடு ஜூட செய்தற்கரிதாகிய ஆத்மோஜ்ஜீவனத்தில் நோக்குமவன் என்பதாம். எனவே இதுவரையில்கூறியவற்றால் நலந்தரும் சொல்லாகிய நாராயணநாமத்தை ஒவ்வொரு குலத்தினரும் அனுசந்திப்பதற்கு உரியவரென்னுமிடத்தையும், அவர்கள் பண்டைக்குலம் கழித்து தொண்டைக்குலம் பெறுவது திண்ணம் என்னும் விஷயமும், அக்குலமே மற்றெல்லா ஆஸ்ரமத்திற்கும் மேலானதென்பதையும், இக்குலத்தில் தோன்றியவர்பால் பற்பல சமயங்களை பாரினில் பரப்பி நின்ற பாமர, மேல்விழுந்து ஸம்பந்தம் கொள்ளும் ப்ரகாரத்தைச் சொல்லியும், செல்வம் என்பது பொதுப்பெயரென்றும் பொருட்செல்வத்தையே பகருவோமாயின் ஆழ்வார்தம்ஸ்வரூபத்துக்குத்தகாதெனவும், அதை அவர் விரும்பாரெனவும், செல்வத்தின் இயல்பு இன்னதென்பதையும்ஒருவகையில் விரும்பினாலும் அடியார் விஷயத்தில் எம்மாத்திரம் அருள்புரிவாரென்பதையும் செல்வமாவது முதுமறைப்பெருமான்பாதம் பெறுதலே மூரிசெல்வமெனவும், அச் செல்வத்துக்குரியவள் பிராட்டியெனவும் அவள்புருஷகாரத்தால் இருவருடைய கர்மபாரதந்த்ர்யமும் குலையுமென்னுமிடத்தையும், புருஷகாரத்தைப் பெற்றார் இன்னார் என்பதையும், அதுவேயழிவிலாதென்பதும், துயரங்கள் இருவகையெனவும், அவை இன்ன ப்ரகாரத்தால் அடியார்களைவிட்டு நீங்கு மெனவும், அந்தமில் பேரின்ப வீட்டையும், கைங்கர்யமாகிற பெருநிலத்தையும் இடைபெறாது அனுபவிக்கவேண்டிய சக்தி விசேஷத்தையும், நின்றநிலைக்குத்தக்கபடி புருஷார்த்தத்தை கொடுக்குமென்னுமிடத்தையும், தாயைவிடமங்களகரமான கார்யங்களை செய்துவிக்கும் என்பன பெறப்படும்.

இங்ஙனம்

R. K. கோவிந்தராமாநுஜன்,

அமீனு திண்டிவனம்.